DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 111/2024**

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 2 | நாள் | : 09.10.2025 |
| பெயர் | : ரமேஷ் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 09th day of October 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் சிவகிரியில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுநராக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சிவகிரியில் உள்ள பேருந்து நிலையத்தில் இருக்கும் ஆட்டோ நிலையத்தில் என்னுடன் இராமசுப்பு ஆட்டோ ஓட்டி வந்தார் அந்த சங்கத்தின் செயலாளராகவும் இருந்து வந்தார். 15.08.2015 அன்று எங்கள் ஊரில் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் பக்கத்தில் உள்ள செட்டில் கொலை செய்யப்பட்டு இறந்துபோனார். எங்கள் சங்கத்தின் விதிப்படி இரவு 11 மணிக்குள் ஆட்டோ ஸ்டாண்டிற்கு வரும் சங்க உறுப்பினர்கள் இரவு ஆட்டோ ஓட்டலாம். அதற்கு பின்னர் வந்தால் இரவு ஆட்டோ ஓட்டக்கூடாது எதிரி இரவு 11 மணிக்கு மேல் நிலையத்திற்கு வந்து இரவு நேர ஆட்டோ ஓட்டி வந்தார் அதை செயலாளர் கண்டித்தார். முதல் நாள் அவ்வாறு எதிரி இரவு 11 மணிக்கு மேல் வந்ததை மறுநாள்

செயலாளர் கண்டித்தார். 14.08.2015 அன்று பேருந்து நிலையத்திற்கு வெளியே வைத்து கண்டித்தார். 14.08.2017 இரவு அவ்வாறு கண்டித்தார். 15.08.2017 அன்று இரவு சுமார் 8 அல்லது 8.30 மணியளவில் எங்கள் ஆட்டோ ஸ்டாண்ட் அருகே உள்ள செட் அருகே மீண்டும் எதிரிக்கும் செயலாளருக்கும் சண்டை வந்தது நாங்கள் வெளியே நின்று கொண்டிருந்தோம். உள்ளே சென்று பார்த்தபோது இராமசுப்பு இரத்தக்காயங்களுடன் கீழே கிடந்தார். எதிரி அங்கிருந்து வெளியே வந்தார். அந்த செட்டிற்குள் இரண்டு பேர் மட்டும் இருந்தார்கள். உள்ளே சென்று பார்த்தபோது கத்தி உடைந்து கிடந்தது. அவருக்கு கழுத்தில் ஒரு குத்தும், கையில் ஒரு குத்தும், குத்துப்பட்டு உடல் முழுவதும் இரத்தம் இருந்தது மற்ற காயங்களை நான் பார்க்க முடியவில்லை. நானும், பாலசுப்பிரமணியும், கருப்பசாமியும், செந்தில்குமாரும், உள்ளே சென்றோம் அதற்குள் இராமசுப்பின் மனைவி எங்கிருந்து வந்தார் என்று தெரியாது அவரும் வந்துவிட்டார். இராமசுப்பின் மனைவி நானும், செந்தில்குமாரும், பாலசுப்பிரமணியின் ஆட்டோவில் சிவகிரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து இராமசுப்புவை தென்காசி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிவகிரி அரசு மருத்துவமனையில் வைத்து இராமசுப்புவின் மனைவி போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். இராமசுப்புவிற்கு பேச முடியாத நிலையில் இருந்ததால் அவரது மனைவி வாக்குமூலம் கொடுத்தார். நான் அறிவை சாட்சியாக கையெழுத்திட்டேன். நான் கையெழுத்திட்ட தாள் இதுதான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகும்.

அதன்பின்னர் தென்காசியிலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். திருநெல்வேலி மருத்துவமனையில் வைத்து இராமசுப்பு இறந்துபோனார். அதன்பின்னர் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்த விவரங்களை சொன்னேன் அவர்கள் பதிவு செய்தார்கள். நான் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அ.சா.ஆ-4 வரிசையாகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது "14.08.2015 அன்று பேருந்து நிலையத்திற்கு வெளியே வைத்து கண்டித்தார் 14.08.2017 இரவு அவ்வாறு கண்டித்தார்" என்று கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் என்னை விசாரித்தபோது "உள்ளே சென்று பார்த்தபோது கத்தி உடைந்து கிடந்தது" என்று கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் என்னை விசாரித்தபோது "நானும், பாலசுப்பிரமணியும், கருப்பசாமியும், செந்தில்குமாரும், உள்ளே சென்றோம் அதற்குள் இராமசுப்பின் மனைவி எங்கிருந்து வந்தார் என்று தெரியாது அவரும் வந்துவிட்டார்" என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பமும் என்னுடைய அழைப்பாணையில் உள்ள கையொப்பமும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. கையொப்ப நிபுணருக்கு அனுப்பி ஒப்பிட்டு அறிக்கை பெற எனக்கு ஆட்சேபனை இல்லை. அழைப்பாணையில் உள்ள கையொப்பமும் அ.சா.ஆ-1 புகாரில் உள்ள என்னுடைய கையொப்பமும் வெவ்வேறானது என்றால்

சரியல்ல. அந்த வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்தேன். நான் படித்துப் பார்த்துதான் கையெழுத்துப் போட்டேன். என்னிடமும் தனியே வாக்குமூலம் கேட்டார்கள். அதிலும் நான் கையெழுத்துப் போட்டேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் நான் எத்தனை மணிக்கு கையொப்பமிட்டேன் என்றால் 9 அல்லது 9.15 மணிக்குள் கையொப்பம் செய்திருப்பேன். 9 முதல் 9.15 க்குள் இராமசுப்பின் மனைவி அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல மருத்துவமனையில்தான் இருந்தார். இரவு 8.45 மணிக்கு சிவகிரி மருத்துவமனையிலிருந்து தென்காசி மருத்துவமனைக்கு புறப்பட்டுச் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. குறிப்பாக எத்தனை மணிக்கு சிவகிரியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள் என்று என்னால் கூற இயலாது. நான் மருத்துவமனைக்கு சென்ற பின்னர்தான் இசக்கிபாண்டி, கருத்தப்பாண்டி வந்தார்கள் வேறு யார் யார் வந்தார்கள் என்றால் குறிப்பிட்டுக் கூற இயலாது. அங்கு கருத்தப்பாண்டி வந்தபின்னர்தான் இராமசுப்பின் மனைவியை அழைத்து வரும்படி சொன்னார்கள் என்றால் சரியல்ல அவர் எங்களுடன்தான் இருந்தார். பேருந்து நிலையத்திற்குள் இருக்கும் நான் உறுப்பினராக இருக்கும் சங்கம் எப்போது பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் நான் ஆட்டோ வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் சார்ந்திருக்கும் ஆட்டோ சங்கத்தில் சுமார் 15 நபர்கள் உறுப்பினராக உள்ளோம் என்றால் சரிதான். நான் சார்ந்திருக்கும் சங்கம் பேருந்து நிலையத்திற்கு

உள்ளே இருக்கும் சங்கம் ஆகும். பேருந்து நிலையத்திற்கு வெளியேயும் ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது. அந்த சங்கத்தில் அனைத்து சமுதாயத்தினரும் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் சங்கத்தில் கூட்டம் நடத்தப்படும் அதற்கு மினி புத்தகமும் இருக்கும். மூன்று வருடத்திற்கு ஒருமுறை பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். எங்களது சங்கம் முன்னதாக பேருந்து நிலையத்திற்கு வெளியே இருக்கும் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் அருகில் செயல்பட்டு வந்தது என்றால் சரிதான். பழைய பேருந்து நிலையம் இருப்பதாக சொல்வார்கள் நான் அதை பார்த்ததில்லை ஒரே பேருந்து நிலையம் மட்டும்தான் உள்ளது. பழைய காவல்நிலையம் இருந்த இடம் தெரியும். அந்த இடம் பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். எதிரி வீட்டிற்கு அருகில் வசிக்கிறேன் என்றால் சரிதான். இரவு பழைய சிவகிரி காவல் நிலையம் அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்திலிருந்து ஆட்களை ஏற்றிச் செல்வோம் என்றால் சரிதான் இரவு 8.30 மணிக்கு மேல் ஏற்றிச் செல்வோம். பேருந்துகள் நிலையத்திற்குள் வராமல் 8.30 மணிக்கு முன்பாக வராமலேயே சென்றால் நாங்கள் பழைய காவல் நிலையம் அருகிலிருந்து ஆட்களை ஏற்றிச் செல்வோம் என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்குள் இருக்கும் பழக்கடையில் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்தூட் பைனான்ஸ் நிறுவனத்திலும் கண்காணிப்பு கேமிரா உள்ளது அது ஆட்டோ ஸ்டாண்டிற்கு எதிரே உள்ளது. பழக்கடையிலும் இருபுறமும் பார்க்கும் வகையில்

கேமிரா பொருத்தப்பட்டுள்ளது. ஆட்டோ ஸ்டாண்டிற்கு மேற்கே முத்து, சோமு எலக்ட்ரிக் கடை உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்குள் திருப்பதி என்பவரின் பழக்கடை உள்ளது. பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலுக்கு எதிரே ஏ.டி.எம் அறை, டீக்கடை, மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளது என்றால் சரிதான். அங்கு பொருத்தப்பட்டுள்ள கேமிராக்களும் பேருந்து நிலையம் ஆட்டோ ஸ்டாண்டை நோக்கி அமைந்திருக்கும் என்றால் சரிதான். அந்த கேமிராக்களை பார்வையிட்டால் இராமசுப்பின் மனைவி பேருந்து நிலையம் வந்தாரா இல்லையா என்று தெரியும் என்றால் சரிதான். அதைப்போலவே எதிரியும் பேருந்து நிலையத்திற்குள் வந்தாரா இல்லையா என்பது தெரியும் என்றால் சரிதான். நான் கூறும் அந்த செட் தென்னங்கூரையால் வேயப்பட்ட சாய்வான செட் ஆகும். வடபுறம் திறந்தவெளி, கிழக்கிலும், மேற்கிலும் கூரையால் அடைக்கப்பட்டிருந்தது. தென்புறம் கல்யாண மண்டப சுவர் ஆகும். அதற்குள் கல் திண்ணை உள்ளது என்றால் சரிதான். தண்ணீர் கேன் மற்றும் பிளாஸ்டிக் டம்ளரும் இருக்கும். போலீசார் அங்கு வந்து பார்த்தபோது அவை இருந்தது போலீசார் குறித்தார்களா என்று எனக்கு தெரியாது. எங்கள் ஸ்டாண்டிற்கு கிழக்கே ஒரு சைக்கிள் ஸ்டாண்ட் உள்ளது. அந்த ஸ்டாண்டில் வாடகையை வசூலிப்பவர் கருத்தப்பாண்டி. நான் கூறும் சம்பவ நாளிலும் அவர்தான் இருந்தார். அந்த சைக்கிள் ஸ்டாண்டிற்கு அருகிலேயே வடபுறம் ஆண் பெண் கழிவறை உள்ளது என்றால் சரிதான். அந்த கழிப்பறை கட்டணத்தை வசூலிப்பவர் யார் என்று தெரியாது. அது கட்டண

கழிப்பறை என்றால் சரிதான். அங்கு கட்டணம் வசூலிக்க ஒருவர் இருப்பார். இரவு 10.00 மணி வரை இருப்பாரா என்றால் அது தெரியாது. அந்த கழிவறையின் கட்டணம் வசூலிப்பவர் யார் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. கட்டண கழிப்பறை வசூலிப்பவர் இரவு 10.00 மணிவரை அங்கு இருப்பார் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஆட்டோ செட்டிற்கு எதிரே வேன் ஸ்டாண்ட் உள்ளது அங்கு எப்போதும் வேன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். எப்போதும் அங்கு 15 பேர் இருப்பார்கள் என்றால் 5 அல்லது 6 நபர்கள் இருப்பார்கள். எங்கள் ஆட்டோ ஸ்டாண்ட் செட்டிற்குள் மின்விளக்கு வெளிச்சம் இல்லை. இரவு 9.45 மணிவரை பேருந்து நிலையம் இயக்கத்தில் இருக்கும். அந்த செட்டில் ஒரு அட்டையில் சங்க உறுப்பினர்களின் வாகனங்கள் எப்போது சவாரி ஏற்றிச் செல்கிறார்களோ அவர்கள் மேற்படி விவரத்தை அந்த அட்டையில் குறித்துக் கொண்டு செல்வார்கள் என்றால் சரிதான். ஒரு ஆட்டோ சென்றவுடன் அதையடுத்த ஆட்டோவில் சுழல் முறைக்கு வருபவர் அதை மார்க் செய்வார் என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்கு வெளியே காந்தி கலையரங்கம் மற்றும் நகராட்சி அலுவலகம் உள்ளது. அங்கு அரசியல் கட்சியினர் கூட்டம் நடத்துவார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள நாள் சுதந்திரதினம் என்றால் சரிதான். அரசியல் பிரமுகர்கள் தேச தலைவர்களுக்கு அங்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஊர்வலம் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய தேதியில் அரசியல் கட்சியினரால்

மறைந்த தலைவர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. இராமசுப்பின் மனைவி பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் அவரிடம் பேசி பழகியதில்லை அவரது வீட்டிற்கும் சென்றதில்லை. இராமசுப்புவிற்கு வேறு பெண்களுடன் சகவாசம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பூமாரி என்ற மாரியம்மாள் என்பவருடன் இராமசுப்பு பழக்கம் வைத்துக் கொண்டதால் பூமாரியின் கணவருக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவர்கள் பிரிந்து வாழ்ந்து வந்தனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் மாரியம்மாளின் கணவருக்கு இராமசுப்பு மீது விரோதம் இருந்தது என்றால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. இராமசுப்பு வெளியூர் ஆட்டோகாரர்களை கண்டித்தார் என்றால் அது எனக்கு தெரியாது. இராமசுப்பு அவ்வாறு கண்டித்தார் என்றும் அதனால் வெளியூர் ஆட்டோக்காரர்கள் இராமசுப்பு மீது விரோதம் கொண்டிருந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியின் உடன் பிறந்த சகோதரர் காளிமுத்து என்பவரை காளிராஜ் என்பவர் கொலை செய்யப்பட்டதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான் அந்த காளிராஜ் இராமசுப்புவின் உறவினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு அது தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காளிராஜ் இறந்த வழக்கில் பொன்மாரி புகார்தாரர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் எதிரி மீது இராமசுப்பு குடும்பத்தினர் விரோதம் கொண்டிருந்தனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு

தெரியும் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாகமாரியம்மன் கோவிலில் பகல் நேரத்தில் மட்டுமே பூஜை நடக்கும் என்றால் சரியல்ல நான் அந்த கோவிலுக்கு சென்றிருக்கிறேன். அந்த கோவில் சிவகிரி பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. இரவு நேரத்தில் பெண்கள் தனியாக நடந்து சென்று வரமுடியும். நான் கூறுவது தவறு என்றும் இரவு நேரத்தில் பெண்கள் தனியே சென்றுவரமாட்டார்கள் என்றால் சரியல்ல. பேருந்து நிலையத்தில் நான் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தபோது சம்பவத்தை பற்றி பார்த்தேன் என்று போலீசாரிடம் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் கூறினேனா என்று சரியாக ஞாபகமில்லை. முதல் நாள் எதிரியை இராமசுப்பு கண்டித்தார் என்று கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. போலீசாரால் வழக்கை வழு சேர்ப்பதற்காக இட்டுக்கட்டப்பட்ட முன்விரோதம் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில்தான் இருந்தேன். காயம்பட்ட கிடந்ததைத்தான் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் தடுக்க முயன்றதாகவோ காயம்பட்டவருக்கு உதவி செய்ததாகவோ போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் இருக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் ஆட்டோவில் ஏற்றும்போது எத்தனை பேர் கூடியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அந்த இடத்திலேயே இல்லை என்றும் சம்பவத்தை கேள்விப்பட்டுதான் சென்றேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு சென்ற

ஆட்டோவை நான் ஓட்டவில்லை. என் உடையில் இரத்தம்படவில்லை. அவரது மனைவிதான் இராமசுப்புவை வைத்திருந்தார். எங்களுடன் இராமசுப்பு மனைவி ஆட்டோவில் பயணிக்கவில்லை என்றால் சரியல்ல. பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு ஆட்டோவில் செல்ல 10 நிமிடங்கள் ஆகும் என்றால் சரியல்ல 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். மருத்துவரிடம் நான் எதுவும் கூறவில்லை. சிவகிரியிலிருந்து ஆம்புலன்ஸ் மூலம் சென்றார் அந்த ஆம்புலன்ஸ் விவரம் பற்றி தெரியாது. சுமார் 1/2 மணி நேரம் கழித்து தென்காசி புறப்பட்டது. எனக்கு திருமணம் நடைபெறாமல் இருப்பதற்கு எதிரிதான் காரணம் என்று நான் எதிரி மீது விரோதம் கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. சிவகிரியிலிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு செல்ல சுமார் 1 1/2 மணி முதல் 2 மணி நேரம் ஆகலாம் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் எவ்வாறு வாக்குமூலம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும் போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் நான் ஊரிலேயே இல்லை என்றும் இறந்தவர் காயம்பட்ட விவரத்தை ஆட்டோ ஸ்டாண்டில் உள்ளவர்கள் சொன்னதை கேட்டு நானும், எங்கள் சங்க மற்ற உறுப்பினர்களும் சிவகிரி பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் சரியல்ல. அந்த சம்பவம் 15.08.2017 தேதி இரவு 7 முதல் 8.30 மணி வரை சிவகிரி பேருந்து நிலையத்திற்கு

வெளியே அரசியல் கட்சியினர் மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்த ஊர்வலமாக வரும்வழியில் இராமசுப்பு தகராறு செய்து அந்த தகராறில் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட இராமசுப்புவிற்கு தெரிந்த விரோதிகள் தாக்கியதால் காயம் ஏற்பட்டு பின்னர் தப்பிக்கவேண்டி சிவகிரி பேருந்து நிலையத்திற்குள் உள்ள ஆட்டோ ஸ்டாண்ட் செட்டிற்குள் வந்து விழுந்துள்ளார் என்றும் அவர் காயப்பட்ட விவரம் தகவல் கேள்விப்பட்டு நானும் மற்ற உறுப்பினர்களும் சிவகிரி பேருந்து நிலையம் சென்று பார்த்தபோது பேருந்து நிலையத்தில் இருந்தவர்களும் சம்பவ கேள்விப்பட்டு வந்த ஆட்டோ ஓட்டுநர்களும் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கேள்விப்பட்டு நான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சிவகிரி பேருந்து நிலையத்திற்குள் நான் இல்லவே இல்லை என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவேயில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரி இராமசுப்புவை அவதூறாக பேசியும், கத்தியால் தாக்கியதாக சொல்வதும், பின்னர் எங்களை கொலை மிரட்டல் விடுத்ததாக கூறுவதும் அதன்பின்னர் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் சாட்சிகள் செந்தில், கருப்பசாமி ஆகியோர்களுடன் உதவியுடன் மருத்துவமனைக்கு சென்றதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. இராமசுப்புவை தாக்கிய உண்மையான எதிரி யார் என்று தெரியாததால் யாரோ செய்த கொலைக்கு நான் பொன்மாரியைத்தான் எதிரியை

சேர்க்க வேண்டுமென்று அ.சா.1 குடும்பத்தினர் வற்புறுத்தியதால் அவர்கள் குடும்பத்தினருக்கு தெரிந்த போலீசார் மற்றும் பாபு அவர்களின் தூண்டுதலின்பேரில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயாரிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்திற்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியால் இராமசுப்புவிற்கு எந்த காயமும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் எதிரி ஊரிலேயே இல்லை என்றும் அவர் ஆட்டோ ஓட்டவேயில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்துப் போட்டேன் என்று கூறவில்லை என்றால் கூறினேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 ஆவணத்தில் பொன்மாரி மீது புகார் எழுதிக் கொடுத்தேன் என்று காணப்படுகிறது என்றால் சரிதான். நான் எழுதிக் கொடுத்த புகாரிலும் இராமசுப்புவிற்கு யாரோ இனம் தெரியாத நபரால் ஏற்பட்ட காயம் என்று குறிப்பிட்டு புகார் கொடுத்திருந்தேன் என்றும் அந்த புகார் வழக்கிற்கு விரோதமாக அமையும் என்பதால் அதை மறைக்கப்பட்டு அ.சா.ஆ.1 புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதும் போலீசார் சொல்லிக்கொடுத்ததுபோல் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசாரை பகைத்துக் கொண்டால் அங்கு ஆட்டோ ஓட்ட முடியாது என்பதால்

போலீசார் சொல்லிக் கொடுத்தது போல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.09 18:45:36 +0530